எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய இந்தக் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக இந்த ஆண்டே தரம் உயர்த்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை வரிசையில் வைத்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

116—

வட்டாட்சியர் அலுவலகம்

***109045—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

2010 ஏப்ரல் 28]

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தாலுகா என்பது தமிழகத்திலேயே மிக அதிகமான ஊராட்சிகளை, அதாவது 61 ஊராட்சிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய தாலுகா ஆகும். கங்கைகொண்டான் வரை பரந்து விரிந்த பகுதியைக் கொண்டது. ஒட்டப்பிடாரம் மற்றும் விளாத்திக்குளம் என இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. அங்கு தற்போது இருக்கும் கட்டடம், 1975 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம். அதுவும், தாலுகா அலுவலகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடம் இல்லை. அது மருத்துவமனைக்காகக் கட்டப்பட்ட கட்டடம். அந்தப் பழைமையான, குறுகிய கட்டடத்திலே வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 35 வருடங்களாக இயங்கி வருகிறது. எனவே, மிகப் பெரிய தாலுகாவான ஒட்டப்பிடாரம் தாலுகாவிற்குத் தனியாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தர தங்கள்மூலம் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அது மருத்துவமனைக் கட்டடத்திலேதான் 1966-லிருந்து தொடர்ந்து இயங்கி வருகிறது. அங்கு இருக்கின்ற நிலம், ஏறத்தாழ 50 செண்ட் நிலத்திலே இப்போது 20 செண்ட் அளவிற்குக் கட்டடங்கள் இருக்கின்றன. மீதி 30 செண்ட் நிலம் அங்கே இருக்கின்ற காரணத்தால், கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு, அரசு நிச்சயமாக மாவட்ட ஆட்சியர் மூலமாகப் பரிந்துரையைப் பெற்று ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மோகன்? சரி என்று சொல்லிவிட்டார் அல்லவா?

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தாலுகா மிகவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் வாழும் வானம் பார்த்த பூமிப் பகுதியாகும். அதோடு சுதந்திரத்திற்கு முதன்முதலில் குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன், செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் ஆகியோர் பிறந்த புண்ணிய பூமி இது.

[2010 ஏப்ரல் 28

இப்போதுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தின் அருகிலே சுமார் ஒரு ஏக்கர் நிலம் உள்ளது என்று அங்குள்ள வருவாய் அலுவலர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த ஒரு ஏக்கர் நிலத்தில் ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அவசியம் கருதி கட்டடம் கட்டித் தர இந்த அரசை வலியுறுத்தி தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். அதுபோல வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றவும் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழைமையான ஆங்கிலேயர் காலத்துக் கட்டடம். இடம் பற்றாக்குறையாக இருப்பதால் மழைக் காலங்களில் மேற்கூரையிலிருந்து தண்ணீர் சொட்டி அங்குள்ள அரசு அலுவலகக் கோப்புகள் வீணாகின்றன. அதனால் புதிய வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் பழைமையான கட்டடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, 100 ஆண்டுகளைக் கடந்திருக்கிற பழுதுபட்டிருக்கின்ற அந்தக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிதாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியளித்து, ஒவ்வோர் ஆண்டும் கட்டடங்களைக் கட்டுகின்ற பணியும் மற்றும் புதுப்பிக்கின்ற பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய வட்டங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. புதிய வட்டங்களுக்குப்

2010 ஏப்ரல் 28]

புதிய கட்டடங்களும் கட்டப்படுகின்றன. பழையக் கட்டடங்களைப் புதுப்பிக்கின்ற பணியையும் தலைவர் கலைஞர் அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. வருகின்ற காலத்திலே முன்னுரிமையின் அடிப்படையிலே எத்தனைக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்ற பட்டியல் அரசிடம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு எதிர்காலத்திலே பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி சங்கத்திலும், கூட்டுறவு வங்கியிலும் கடன் பெற்றவர்களின் வீடுகளுக்கு அரசு அலுவலர்கள் சென்று அவர்களுக்குக் குடிநீர் மற்றும் மின்சாரம் வராமல் தடுத்து நிறுத்துகிறார்கள். வீட்டு வசதி வாரியத்தில் கடன் பெற்றவர்களும், நெசவாளர்களும் மிகப் பெரிய வறிய நிலையில் இருப்பதால், அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக வட்டியையாவது தள்ளுபடி செய்து, அசலைக் கட்டுவதற்கு அவர்களுக்கு அவகாசம் தர அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும், விடையளிக்கிறேன். ஜப்தி நடவடிக்கையையெல்லாம் இந்த அரசு எடுக்கவில்லை. அனைத்தையும் நிறுத்தி வைத்திருக்கிறது. ஏற்கெனவே விரிவாக இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் அளித்திருக்கிறேன். 2008 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு, ரூபாய் 680 கோடிக்கு மேல் இதிலே வட்டி, அபராத வட்டி இவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்து கொடுத்து இருக்கிறது. ஓராண்டுக் காலத்தில் திரும்பக் கட்டாமல் இருந்துவிட்டு, இப்போது மாண்புமிகு உறுப்பினர் வட்டியையாவது தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். ஓராண்டுக் காலத்திலே அவற்றைத் தள்ளுபடி செய்து கொடுத்து, மீண்டும் அந்தச் சங்கங்கள் வங்கியிலே கடன் வாங்கித்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துச்

சொல்லியிருக்கிறேன். இணையம் வங்கிகளில் கடன் வாங்கி, திரும்ப சங்கத்திற்குக் கொடுக்கிறது. இப்பொழுது வட்டி, அபராத வட்டியை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்பது பொருத்தமாக இல்லை. ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களின் சம்பள விகிதங்கள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. பல சங்கங்களின் தன்னிலை உயர்கின்ற நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. எதிர்காலத்திலே என்ன செய்ய முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துதான் இதிலே முடிவெடுக்க முடியும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

சுற்றுலாத் தலம்

***57349—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, முட்டல் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, முட்டல் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்துதரும் கருத்துரு எதுவும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.